Puducherry / Regional Bulletin / Tamil /18.10hrs / 09.05.2026 / Script

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி : 09.05.2026 – சனிக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

-----------------------------------------------------------------------------------------------

***தலைப்புச் செய்திகள்***

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை, குஜராத்திற்கு இரண்டு நாள் பயணம் மேற்கொள்கிறார்.

மேற்கு வங்கத்தில் பாஜக சட்டமன்ற கட்சித் தலைவர் திரு. சுவேந்து அதிகாரி, இன்று முதலமைச்சராக பதவியேற்றார்.

பிரதமரின் 3 காப்பீட்டுத் திட்டங்கள் 11 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது.

முப்படைகளின் தளபதியாக லெப்டினென்ட் ஜென்ரல் ராஜா சுப்ரமணி நியமிக்கப்பட்டுள்ளார்.

***மோடி (12)***

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை குஜராத்திற்கு இரண்டு நாள் பயணம் மேற்கொள்கிறார். நாளை மறுநாள் சோம்நாத் கோவிலின் மறுசீரமைப்பின் 75-வது ஆண்டு நிறைவை குறிக்கும் வகையில் நடைபெறும் 'சோம்நாத் அம்ருத் மகோத்சவம்' உள்ளிட்ட சமய மற்றும் கலாச்சார நிகழ்வுகளில் பங்கேற்கிறார்.

சோம்நாத்தின் செழுமையான பாரம்பரியத்தையும், ஆன்மீக முக்கியத்துவத்தையும் போற்றும் வகையில், பிரதமர் நினைவு அஞ்சல் தலை மற்றும் நாணயத்தையும் வெளியிடுகிறார்.

தனது பயணத்தின் போது, வதோதராவுக்கும் செல்லும் அவர், 'சர்தார்தாம் விடுதி' யைத் திறந்து வைத்து பார்வையிடுகிறார். இந்த விடுதியில், ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ-மாணவியர் தங்கும் வசதிகளுடன், மைய உணவருந்தும் கூடம், நூலகம் மற்றும் கலையரங்கம் போன்ற அடிப்படை வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

***மோடி – தெலங்கானா (8)***

பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாளை தெலங்கானாவில் சுமார் ஆயிரத்து 535 கோடி ரூபாய் மதிப்பிலான முக்கிய ரயில்வே உள்கட்டமைப்பு திட்டங்களைத் தொடக்கி வைக்கிறார். முக்கிய ரயில் பாதைகளின் திறனை வலுப்படுத்தவும், நெரிசலைக் குறைக்கவும், 118 கிலோமீட்டர் நீளமுள்ள காசிபேட் – விஜயவாடா பல்வழித் திட்டம் மற்றும் காசிபேட் ரயில் மேம்பால புறவழிச்சாலை ஆகியவற்றின் தொடக்க விழா உள்ளிட்ட பல நிகழ்ச்சிகளில் திரு. மோடி பங்கேற்கிறார். மேலும், செகந்திராபாத்தில் நடைபெறும் பொதுக்கூட்டம் ஒன்றிலும் அவர் உரையாற்ற உள்ளார்.

***மேற்கு வங்கம் -1 (10)***

மேற்கு வங்கத்தில் பாஜக சட்டமன்ற கட்சித் தலைவர் திரு. சுவேந்து அதிகாரி, இன்று முதலமைச்சராக பதவியேற்றார். கொல்கத்தாவில் உள்ள பிரிகேட் அணிவகுப்பு மைதானத்தில் நடைபெற்ற பிரமாண்ட விழாவில், அம்மாநில ஆளுநர் திரு. ஆர்.என். ரவி, திரு. சுவேந்து அதிகாரிக்கு பதவிப் பிரமாணமும், ரகசிய காப்பு உறுதிமொழியும் செய்து வைத்தார்.

இவ்விழாவில், பிரதமர் திரு. நரேந்திர மோடி, மத்திய அமைச்சர்கள் திரு. அமித் ஷா, திரு. ராஜ்நாத் சிங், பாஜக தேசியத் தலைவர் திரு. நிதின் நபின் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். முதலமைச்சருடன், திரு. திலீப் கோஷ், திரு. அக்னி மித்ரா பால், திரு. அசோக் கீர்த்தானியா, திரு. நிசித் பிரமாணிக், திரு. க்ஷுதிராம் துடு ஆகிய 5 கேபினேட் அமைச்சர்களும் பதவியேற்றனர். இது குறித்த கூடுதல் தகவல்கள்…

(வாய்ஸ்)

***மேற்கு வங்கம் - 2 (16)***

(வாய்ஸ்)

<u>மேற்கு வங்க சட்டமன்றத்தில் மொத்தம் 294 சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நடைபெற்ற தேர்தலில், 207 தொகுதிகளை பெற்று பாஜக முதல் முறையாக அம்மாநிலத்தில் ஆட்சி அமைத்துள்ளதும், திரிணாமுல் காங்கிரஸ் 15 ஆண்டுகள் ஆட்சி செய்த பின்னர், 80 இடங்களை மட்டுமே பெற்றுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.</u>

<u>மேற்கு வங்கத்தின் முதலமைச்சராக பதவியேற்ற திரு. சுவேந்து அதிகாரிக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்துத் தெரிவித்துள்ளார். திரு. சுவேந்து, மக்களுடன் ஆழமான பிணைப்பை கொண்டுள்ளவர் என்றும், மக்களின் விருப்பங்களை மிக நெருக்கத்தில் இருந்து புரிந்து கொண்ட தலைவர் என்றும் தமது சமூக ஊடகப் பதிவில் பிரதமர் தெரிவித்துள்ளார்.</u>

மேலும், அவரது பதவிக்காலம் பயனுள்ளதாக அமைய தாம் வாழ்த்துவதாகவும், அவருடன் பதவியேற்றுக் கொண்டுள்ள அமைச்சர்களும் மேற்கு வங்கத்தின் வளர்ச்சி பயணத்தை மேலும் வலுப்படுத்துவார்கள் என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மேற்குவங்கத்தின் ஃபால்டா தொகுதியில் மட்டும் வரும் 21ஆம் தேதி மறு வாக்குப்பதிவு நடைபெற்று, 24ஆம் தேதி வாக்குகள் எண்ணப்பட உள்ளன.

***ஜெய்சங்கர் (9)***

டிரினிடாட் டொபேகோ உடனான நல்லுறவு பாரம்பரியமிக்கது என்று, மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார். இரு நாடுகளுக்கும் இடையேயான உறவை வலுப்படுத்துவதற்கான அம்சங்கள் குறித்து அந்நாட்டு பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்தினார். இதனைத் தொடர்ந்து, சுற்றுலா, சூரிய மின்சக்தி, ஆயுர்வேதம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒப்பந்தங்களும் கையெழுத்தாயின. அரசுமுறைப் பயணமாக அந்நாட்டிற்குச் சென்றுள்ள டாக்டர் ஜெய்சங்கர் இரு நாடுகளுக்கும் இடையே கலாச்சாரம், விளையாட்டு உள்ளிட்ட பல்வேறு அம்சங்களில் ஒற்றுமை காணப்படுவதை சுட்டிக்காட்டி உள்ளார்.

***மத்திய பிரதேசம் – சிந்தியா (7)***

மத்திய தகவல் தொடர்புத்துறை அமைச்சர் திரு. ஜோதிராதித்ய சிந்தியா, தனது தொகுதியான, மத்திய பிரதேச மாநிலம், குணா-விற்கு நாளை செல்கிறார். அங்கு சுமார் 3 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை தொடக்கி வைக்கிறார். இதன் ஒருபகுதியாக குவாலியர் – Chambal பிராந்தியத்தில், சுமார் ஆயிரத்து 100 கோடி ரூபாய் முதலீட்டில், முதல் சிமெண்ட் ஆலை, ஒன்றிற்கும் அவர் அடிக்கல் நாட்டுகிறார்.

***தொழிலாளர் துறை (5)***

தொழிலாளர் நலனுக்கான 4 புதிய சட்டங்கள் முழுமையாக செயல்பாட்டிற்கு வந்துள்ளதாக, மத்திய அரசு கூறியுள்ளது. இதற்கான விதிமுறைகள் வெளியிடப் பட்டுள்ளதாக, அத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது. தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பை உறுதி செய்ய இந்த சட்டங்கள் பயனலளிக்கும் என்றும் அந்த செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

***காப்பீட்டுத் திட்டம் (17)***

பிரதமரின் விபத்து காப்பீட்டுத் திட்டம், ஆயுள் காப்பீட்டுத் திட்டம் மற்றும் அடல் ஓய்வூதிய திட்டங்களில் இதுவரை 94 கோடி பேர் இணைந்துள்ளதாக, மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார். பிரதமரின் 3 காப்பீட்டுத் திட்டங்கள் 11 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளதைத் தொடர்ந்து, புதுடெல்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய அவர்,

ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் இதுவரை 21 ஆயிரத்து 500 கோடி ரூபாய் இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளதாகவும், 10 லட்சத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இதன் மூலம் பயனடைந்து உள்ளதாகவும் தெரிவித்தார்.

பிரதமரின் விபத்து காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் இதுவரை 660 கோடி ரூபாய் அளவிற்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் 1 கோடியே 84 லட்சம் குடும்பங்கள் பயனடைந்து உள்ளதாகவும் நிதியமைச்சர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய நிதித்துறை இணையமைச்சர் திரு. பங்கஜ் சௌத்ரி இந்த திட்டங்கள் முழுமையாக டிஜிட்டல் மயமாக்கப்பட்டு உள்ளதாகவும், இதன் காரணமாக பயனாளிகள் எந்தவித சிரமமும் இன்றி

இழப்பீட்டுத் தொகை பெறுவது உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

***ராணுவம் -1 (4)***

முப்படைகளின் தளபதியாக லெப்டினென்ட் ஜெனரல் ராஜா சுப்ரமணி நியமிக்கப்பட்டுள்ளார். இப்பொறுப்பினை தற்போது வகித்து வரும் அனில் சௌஹானின் பதவிக்காலம் வரும் 30ஆம் தேதியுடன் முடிவடைய உள்ள நிலையில் இந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது குறித்த கூடுதல் தகவல்கள்…

(வாய்ஸ்)

***ராணுவம் - 2 (9)***

(வாய்ஸ்)

லெப்டினென்ட் ஜெனரல் ராஜா சுப்ரமணி, தற்போது தேசிய பாதுகாப்பு குழுமத்தின் ராணுவ ஆலோசகராக பணியாற்றி வருகிறார். மறு உத்தரவு வரும் வரை, அவர் ராணுவ விவகாரங்கள் துறையின் செயலராகவும், பணியாற்றுவார் என்று பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ராணுவ பாதுகாப்பு அகாடமியில் தமது இளநிலை கல்வியை முடித்த அவர், 1985ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கர்ஹ்வால் ரைஃபில் 8ஆவது பெட்டாலியன் பிரிவில் தமது பணியை தொடங்கினார். லண்டன் ராணுவ சேவை, தலைமைக் கல்லூரி உள்ளிட்ட பல்வேறு உயர் ராணுவ பிரிவுகளிலும் பயின்றவர் அவர் என்பது குறிப்பிடத்தக்கது.

*ராணுவம் - 3 (5)*

தற்போதைய கடற்படைத் தளபதி அட்மிரல் தினேஷ்குமார் திரிபாதி, இம்மாதம் 31ஆம் தேதி, ஓய்வு பெறுவதை அடுத்து, புதிய கடற்படை தளபதியாக வைஸ் அட்மிரல் கிருஷ்ணா சுவாமிநாதன் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தற்போது மேற்கு கடற்படைத் தளபதியாக பணியாற்றி வருவதாக மத்திய பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

***வேளாண்துறை (8)***

வேளாண் துறையின் நீடித்த வளர்ச்சிக்கான தேசிய இயக்கத்தின் கீழ், இதுவரை 2 ஆயிரத்து 119 கோடி ரூபாய் விடுவிக்கப் பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது. இதன் மூலம் 14 லட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் பயனடைந்து இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த இயக்கத்தின் கீழ், கடந்த நிதியாண்டில், 97 லட்சம் மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு அதன் வளம் குறித்து பரிசோதிக்கப்பட்டதாகவும், அதன் அடிப்படையில் மண் வள அட்டைகள் விவசாயிகளுக்கு வழங்கப் பட்டுள்ளதாகவும், மத்திய அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

***தாகூர் (8)***

குருதேவ் ரபீந்திரநாத் தாகூரின் 165ஆவது பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி அவருக்கு மரியாதை செலுத்தி உள்ளார். கலாச்சார நம்பிக்கையுடன் கூடிய தாகூரின் சிந்தனைகள் நாகரீக இந்தியாவின் குரலாக இன்றும் விளங்குவதாக பிரதமர் தமது சமூக ஊடகப் பதிவில் தெரிவித்துள்ளார். மேலும், வருங்கால தலைமுறையினருக்கு தாகூரின் சிந்தனைகள் உத்வேகம் அளிக்கும்

என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். நாடாளுமன்றத்தின் மைய மண்டபத்தில் உள்ள அவரது திருவுருவ படத்திற்கு உறுப்பினர்கள் உள்ளிட்டோர் இன்று மலரஞ்சலி செலுத்தினர்.

***கேரளா – புதுச்சேரி (7)***

கேரளாவில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி ஆட்சி அமைக்க உள்ள நிலையில், முதலமைச்சர் யார் என்பது இன்று இறுதி செய்யப்பட உள்ளது.

புதுச்சேரியில், திரு. ரங்கசாமி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு வரும் புதன் கிழமை பதவியேற்க உள்ளது. 30 இடங்களைக் கொண்ட புதுச்சேரி சட்டப் பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில், என்.ஆர்.காங்கிரஸ் 12 இடங்களிலும், பாஜக 4 இடங்களிலும் வெற்றி பெற்று ஆட்சியை தக்க வைத்துள்ளது.

***புதுச்சேரி - பத்ம விருதுகள் (5)***

2027-ஆம் ஆண்டு குடியரசு தினத்தில் அறிவிக்கப்பட உள்ள இந்திய அரசின் உயரிய பத்ம விருதுகளுக்கு தகுதியான நபர்களைப் பரிந்துரைக்க வரும் **ஜூலை 31ஆம் தேதி** வரை விண்ணப்பிக்கலாம். அரசு ஊழியர்கள் தவிர, சமூகத்தில் சிறப்பான, தனித்துவமான சாதனை படைத்த எவரும் இதற்கு விண்ணப்பிக்கலாம் என புதுச்சேரி செய்தி விளம்பரத்துறை தெரிவித்துள்ளது.

***ஐபிஎல் (3)***

ஐபிஎல் 20 ஓவர் கிரிக்கெட் போட்டித் தொடரில், ஜெய்ப்பூர், சவாய் மான்சிங் விளையாட்டு அரங்கில் இன்றிரவு 7.30 மணிக்கு தொடங்கும் ஆட்டத்தில், ராஜஸ்தான் மற்றும் குஜராத் அணிகள் களம் காணுகின்றன.

***வானிலை (6)***

மன்னார் வளைகுடா மற்றும் அதனையொட்டிய இலங்கை பகுதிகளில் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுவதால், தென்மேற்கு வங்கக் கடல் பகுதிகளில், வரும் 11ஆம் தேதி வாக்கில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகக்கூடும் என்றும், தமிழகத்தின் அநேக இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி-மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வுத்துறை தெரிவித்துள்ளது.

புதுச்சேரி மற்றும் காரைக்காலில் நள்ளிரவு முதல் பெய்து வரும் மழையின் காரணமாக வெயிலின் தாக்கம் குறைந்து குளிர்ச்சியான சூழல் நிலவுகிறது.

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை, குஜராத்திற்கு இரண்டு நாள் பயணம் மேற்கொள்கிறார்.

மேற்கு வங்கத்தில் பாஜக சட்டமன்ற கட்சித் தலைவர் திரு. சுவேந்து அதிகாரி, இன்று முதலமைச்சராக பதவியேற்றார்.

பிரதமரின் 3 காப்பீட்டுத் திட்டங்கள் 11 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது.

முப்படைகளின் தளபதியாக லெப்டினென்ட் ஜென்ரல் ராஜா சுப்ரமணி நியமிக்கப்பட்டுள்ளார்.